**செ.வெ.எண்: 72** **நாள்: 30.10.2021**

**நாகப்பட்டினம் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலக செய்தி குறிப்பு:**

மார்ச் - 2014 முதல் செப்டம்பர் - 2018 வரையிலான மேல்நிலை தேர்வுகளின் அனைத்து பருவங்களுக்குரிய உரிமைக்கோரப்படாத தனித்தேர்வர்களது அசல் மதிப்பெண் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள அறிவுறுத்தல் குறித்து **திரு.த.சி.வெங்கடநாதன் உதவி இயக்குநர் அவர்களின் செய்திக் குறிப்பு.**

மார்ச் - 2014 முதல் செப்டம்பர் - 2018 வரையிலான மேல்நிலை தேர்வர்களின் அனைத்து பருங்களுக்குரிய உரிமைக்கோரப்படாத தனித்தேர்வர்களது மதிப்பெண் சான்றிதழ்களை கழித்தாள்களாக மாற்றிடும் பொருட்டு அரசிதழில் அறிவிக்கை வெளியிட தலைமையலுவலகத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் இதுவெ இறுதி வாய்ப்பு என்பதால் சம்பந்தப்பட்ட தனித்தேர்வர்கள 31-01-2022 க்குள் தங்களது மதிப்பெண் சான்றிதழ்களை, **நாகப்பட்டினம் - அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில்** பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் செப்டம்பர் - 2018 பருவத்திற்கு பின் தேர்வெழுதிய பருவங்களுக்கான அசல் மதிப்பெண் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளலாம் என அரசுத் தேர்வுகள் **உதவி இயக்குநர் திரு.த.சி.வெங்கடநாதன் அவர்கள்** தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**